A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 13 / 2024</u>**

திரு L.K. திருமூர்த்தி,
த/பெ. காளியண்ணன்,
2/47, இலக்கபுரம், அக்ரஹாரம் (அ),
குருசாமிபாளையம், நாமக்கல் மாவட்டம் – 637 403.

………மேல்முறையீட்டாளர்
(திரு L.K. திருமூர்த்தி)

எதிர்

செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
38/A, கோ–ஆப்ரேட்டிவ் காலனி,
நாமக்கல் – 637 001.

. . . எதிர்மனுதாரர்
(திரு R.K. சுந்தரராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 06-03-2024</u>**

**<u>கேட்புரை நாள்: 17-04-2024</u>**

**<u>ஆணை நாள்: 03-05-2024</u>**

06.03.2024 அன்று பெறப்பட்ட திரு L.K. திருமூர்த்தி, த/பெ. காளியண்ணன், 2/47, இலக்கபுரம், அக்ரஹாரம் (அ), குருசாமிபாளையம், நாமக்கல் மாவட்டம் – 637 403 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 13/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.04.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனக்கு சொந்தமான இலக்கபுரம் கிராமம் சர்வே எண்.29/12–இல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தத்தாத்திரிபுரம் பிரிவிற்குட்பட்ட தனக்கு சொந்தமான இலக்கபுரம் கிராமம் சர்வே எண்.29/12–இல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 5HP மின்பளு புதிய விவசாய மின்இணைப்பு வேண்டி சாதாரண வரிசையில் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்ய அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதை தொடர்ந்து திட்ட மதிப்பீடு தயார் செய்து பெற்ற அனுமதியில் மின் இணைப்பு கோரும் இடத்திற்கு மின்னோட்டம் வழங்க மின்மாற்றியில் போதிய மின்பளு மற்றும் மின் இணைப்பு வழங்குவதற்கு உண்டான வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருந்ததால் புதிய மின்மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டியிருந்ததால் புதிய மின் இணைப்பு வழங்கவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, சர்வே எண். 29/12–இல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தை 03.10.2023 அன்று மேல்முறையீட்டாளர் அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாமக்கல் மின்பகிர்மான வட்டம் 29.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 29.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*
*திரு.LK.திருமூர்த்தி, த/பெ.காளியண்ணன், இலக்கபுரம் கிராமம் ச.எண்: 29/12ல் உள்ள ஆழ்துளைகிணற்றுக்கு விவசாய மின் இணைப்பு வேண்டி 01.08.2009 அன்று சாதாரண வரிசை திட்டத்தில் 24.01.2022 அன்று தயார் நிலை பதிவு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி திரு.L.K.திருமூர்த்தி அவர்கள் தத்தாதிரிபுரம் பிரிவு அலுவலக வரிசை அடிப்படையில் முதல் நபராக உள்ளதால், தலைமை அலுவலகத்தில் இருந்து இலக்கீடு பெறப்பட்டவுடன் மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர் /இ&ப/ நாமக்கல் அவர்களுக்கு உத்தரவிட்டு இம்மனு எண்.51/2023-24 ஆனது இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு L.K. திருமூர்த்தி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு R.K. சுந்தரராஜன், செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல், நாமக்கல் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 நாமக்கல் மாவட்டம், இலக்கபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து விவசாய தொழில் செய்து வருவதாகவும், தான் 01.08.2009–இல் விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்ப எண்: வி.093/2009–2010 விண்ணப்பம் பதிவு செய்து இருந்ததாகவும், அதன் அடிப்படையில் தமிழக முதல்வர் அறிவித்த ஒரு லட்சம் மின் இணைப்பில் தனக்கு மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்ய 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் 31.12.2021 இல் கிடைத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அதன் அடிப்படையில் நாமக்கல் மின் பகிர்மான வட்டம், நாமக்கல் கோட்டம் புதன்சந்தை உபகோட்டம் தத்தாதிரிபுரம் பிரிவு அலுவலகத்தில் 24.01.2022 இல் தயார் நிலை பதிவு செய்ததாகவும், 24.01.2024 உடன் தயார்நிலை பதிவு செய்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதாகவும், ஆனால் இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், 24.01.2022–இல் தயார் நிலை பதிவு செய்த விவசாயிகள் அனைவருக்கும் மின்னிணைப்பு வழங்கி விட்டதாகவும், தனக்கு மட்டும் மின் இணைப்பு வழங்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேலும் தமிழக முதல்வர் மீண்டும் அறிவித்த 50 ஆயிரம் மின் இணைப்பில் தனக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என கூறியதாகவும், அதன் அடிப்படையில் 11.11.2022 இல் கரூர் தடா கோவிலில் நடைபெற்ற முதல்வர் அவர்களின் மின் இணைப்பு துவக்க விழாவிற்கு அழைத்துச் சென்று தானும் ஒரு பயனாளி என்று சான்றிதழ் வழங்கியதாகவும், ஆனால் இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், ஆனால் தினகரன் நாளிதழில் நாள்: 12.01.2023 பக்க எண்: 3இல் 50000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது என செய்தி வந்தது எனவும், தற்போது திருச்சியில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு 27.07.2023 இல் 2022–2023 ஆண்டிற்கு மீண்டும் 50 ஆயிரம் மின் இணைப்பை முதல்வர் அவர்கள் அறிவித்தார், ஆனால் இன்று வரை மின் இணைப்பு வழங்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 இதுவரை சாதாரண வரிசை மின் இணைப்பு பெற தன்னுடைய சொந்த பணம் ரூ.50,000/– செலவு செய்து உள்ளதாகவும், மேலும் மின் இணைப்பு கோரி மின்வாரிய

அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அளித்தால் 2022-2023 ம் ஆண்டில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் அளித்து வருவதாகவும், மேலும் 03.10.2023 இல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மின் இணைப்பு வழங்க கோரி மனு செய்ததன் அடிப்படையில் 19.12.2023 இல் விசாரணை நடைபெற்றதாகவும், மேற்படி CGRF கூட்ட விசாரணையில் மேற்பார்வை பொறியாளர் அவர்கள் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோருக்கு மேற்படி தனக்கு மின் இணைப்பு வழங்க மின்கம்பங்கள் அமைத்து மின்சார கம்பி அமைத்து புதிய மின்மாற்றி வேலைகள் செய்து மின் இணைப்பு வழங்க தயார் நிலையில் வைத்திருக்க கோரி அறிவுரை வழங்கியதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 நாமக்கல் குறைதீர் மன்றம் விசாரணை முடிவு இதுவரை கிடைக்கவில்லை எனவும், மின் இணைப்பு வழங்குவதற்கு எந்த ஒரு பணியும் நடைபெறவில்லை எனவே தனது மனுவை ஏற்று விசாரணை செய்து மின் இணைப்பு வழங்க உத்தரவிடுமாறும், மேலும் விவசாய மின் இணைப்பு வழங்க ஆன்லைனில் Lock Open செய்ய வேண்டும் என்று கூறுவதாகவும், தான் விவசாய மின் இணைப்பு சாதாரண வரிசை கிட்டத்திற்கு 50 ஆயிரம் செலவு செய்தும் மின்னிணைப்பு தரவில்லை தான் ஒரு இருதய நோயாளி தன்னை மின்வாரிய அதிகாரிகள் மிகவும் மன உளைச்சலுக்கு உள்ளாக்குகிறார்கள் எனவும், அரசு அறிவித்தும் மின் இணைப்பு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தத்தாத்திரிபுரம் பிரிவிற்குட்பட்ட மனுதாரர் திரு L.K. திருமூர்த்தி, த/பெ. காளியண்ணன் என்பவர் சர்வே எண் 29/12-ல் உள்ள ஆழ்துளைகிணற்றிற்கு 5HP மின்பளு புதிய விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரண வரிசையில் விண்ணப்பித்து விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னிட்டு அறிவிக்கப்பட்ட 1 லட்சம் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் வாயிலாக தயார்நிலை பதிவு செய்ய செயற்பொறியாளர் /இ&ப/ நாமக்கல் அவர்களால் 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் வழக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர் திரு.L.K.திருமூர்த்தி அவர்கள் கடந்த 24.01.2022 அன்று தயார் நிலையை பதிவு செய்துள்ளதாகவும், அதன் அடிப்படையில்

உதவி பொறியாளர்/இ&ப/தத்தாத்திரிபுரம் அவர்களால் உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளர் /இ&ப/ நாமக்கல் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்கண்ட அனுமதியில் மனுதாரர் மின் இணைப்பு கோரும் இடத்திற்கு மின்இணைப்பு வழங்க இலக்கபுரம் SS–1 / 100KVA மின்மாற்றியில் போதிய மின் பளு மற்றும் மின் இணைப்பை வழங்குவதற்கு உண்டான Regulation வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருந்ததால் புதிய மின் மாற்றி அமைத்து (Major Category) மின் இணைப்பு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 18.12.2021–ல் அறிவிக்கப்பட்ட 1 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் வாரிய அறிவுறுத்தலின் படி மின்மாற்றி அமைக்க தேவை இல்லாத (Minor/Misc Category) தயார் நிலை விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இவருக்கு புதிய மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டி இருந்ததாலும், குறியீடு (Target) நிறைவு பெற்றதாலும் மின் இணைப்பு வழங்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 இந்நிலையில் மீண்டும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்திலும் வாரிய அறிவுறுத்தலின் படி மின்மாற்றி அமைக்க தேவை இல்லாத (Minor/Misc Category) நுகர்வோர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், அவருக்கு புதிய மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டி இருந்ததாலும், குறியீடு (Target) நிறைவு பெற்றதாலும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரருக்கு புதிய மின்மாற்றி மற்றும் மின்பாதை அமைக்கும் பொருட்டு வண்டி வாடகை, JCB வாடகை முதலிய பணிகளுக்கு மனுதாரர் செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளதாகவும், ஆனால் மின் வாரியத்திலிருந்து அவ்வாறு அவரை செலவு செய்ய வேண்டி எதுவும் கோரவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேற்கண்ட இரு திட்டங்களும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட போது துவக்க விழாவிற்கு தயார்நிலை பதிவு செய்துள்ள அனைத்து பயனாளர்களையும் அழைத்துவருமாறு அறிவுறுத்தியதன் பேரில் மனுதாரரும் துவக்க விழாவிற்கு அழைத்து

செல்லப்பட்டதாகவும், அது போலவே அனைத்து நுகர்வோர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதாகவும், ஆனால் வாரிய அறிவுறுத்தலின் படி மின்மாற்றி அமைக்க தேவை இல்லாத (Minor/Misc Category) நுகர்வோர்களுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், மனுதாரருக்கு புதிய மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டி இருந்ததாலும், குறியீடு (Target) நிறைவு பெற்றதாலும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இந்நிலையில் தனக்கு மின் இணைப்பு வழங்குமாறு மனுதாரர் அலுவலகத்தில் கோரியதற்கு குறியீடு ஒதுக்கீடு (Target) அளிக்கப்பட்டவுடன் புதிய மின் இணைப்பு வழங்கப்படும் என தகவல் அளிக்கப்பட்டதாகவும், அதனை ஏற்க மறுத்து மனுதாரர் CGRF–ல் மனு அளித்து, அதன்பேரில் கடந்த 19.12.2023 அன்று மேற்பார்வை பொறியாளர் / நாமக்கல் அலுவலகத்தில் நடைபெற்ற CGRF கூட்டத்தில் மனுதாரருக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டதாகவும், அதனை ஏற்க மறுத்து மனுதாரர் மின் குறைதீர்ப்பாளர் அவர்களை அணுகி முறையிட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்கும் பொருட்டு தற்போது அனைத்து மின்பாதை மற்றும் மின்மாற்றி அமைக்கும் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்க தயார் நிலையில் உள்ளது என்பதும் தலைமை அலுவலகத்தில் இருந்து இலக்கீடு பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு L.K. திருமூர்த்தி, நாமக்கல் மாவட்டம், இலக்கபுரம் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து விவசாய தொழில் செய்து வருவதாகவும், தான் 01.08.2009–இல் விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்ப எண்: வி.093/2009–2010 விண்ணப்பம் பதிவு செய்து இருந்ததாகவும், அதன் அடிப்படையில் தமிழக முதல்வர் அறிவித்த ஒரு லட்சம் மின் இணைப்பில் தனக்கு மின் இணைப்பு வழங்க தயார் நிலை

பதிவு செய்ய 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் 31.12.2021 இல் கிடைத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 அதன் அடிப்படையில் நாமக்கல் மின் பகிர்மான வட்டம், நாமக்கல் கோட்டம் புதன்சந்தை உபகோட்டம் தத்தாதிரிபுரம் பிரிவு அலுவலகத்தில் 24.01.2022 இல் தயார் நிலை பதிவு செய்ததாகவும், ஆனால் இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும், 24.01.2022–இல் தயார் நிலை பதிவு செய்த விவசாயிகள் அனைவருக்கும் மின்னிணைப்பு வழங்கி விட்டதாகவும், தனக்கு மட்டும் மின் இணைப்பு வழங்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் திரு L.K. திருமூர்த்தி, த/பெ. காளியண்ணன் என்பவர் தத்தாத்திரிபுரம் பிரிவிற்குட்பட்ட சர்வே எண் 29/12–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 5HP மின்பளு புதிய விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரண வரிசையில் விண்ணப்பித்து விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னிட்டு அறிவிக்கப்பட்ட 1 லட்சம் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் வாயிலாக 24.01.2024 அன்று தயார் நிலையை பதிவு செய்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் உதவி பொறியாளர்/இ&ப/தத்தாத்திரிபுரம் அவர்களால் உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளர் /இ&ப/ நாமக்கல் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்கண்ட அனுமதியில் மனுதாரர் மின் இணைப்பு கோரும் இடத்திற்கு மின்இணைப்பு வழங்க இலக்கபுரம் SS–1 / 100KVA மின்மாற்றியில் போதிய மின் பளு மற்றும் மின் இணைப்பை வழங்குவதற்கு உண்டான Regulation வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக இருந்ததால் புதிய மின் மாற்றி அமைத்து (Major Category) மின் இணைப்பு வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த 18.12.2021–ல் அறிவிக்கப்பட்ட 1 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் வாரிய அறிவுறுத்தலின் படி மின்மாற்றி அமைக்க தேவை இல்லாத (Minor/Misc Category) தயார் நிலை விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இவருக்கு புதிய மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டி இருந்ததாலும், குறியீடு (Target) நிறைவு பெற்றதாலும் மின் இணைப்பு வழங்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இந்நிலையில் மீண்டும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்திலும் வாரிய அறிவுறுத்தலின் படி மின்மாற்றி அமைக்க தேவை இல்லாத (Minor/Misc Category) நுகர்வோர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், அவருக்கு புதிய மின் மாற்றி அமைத்து மின் இணைப்பு வழங்க வேண்டி இருந்ததாலும், குறியீடு (Target) நிறைவு பெற்றதாலும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்கும் பொருட்டு தற்போது அனைத்து மின்பாதை மற்றும் மின்மாற்றி அமைக்கும் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்க தயார் நிலையில் உள்ளது என்பதும் தலைமை அலுவலகத்தில் இருந்து இலக்கீடு பெறப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்புக்கு தயார் நிலை அறிக்கை 24.01.2022–இல் கொடுத்த நிலையில் எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் இடமானது மின்பகிர்மான மின்மாற்றியின் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியதாக இருந்ததாலும், 2021–22, 2022–23 அரச நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் வரவில்லை என்பதாலும் மின் இணைப்பு வழங்க இயலவில்லை என்ற நிலையில் தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி எண்.5 ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்படுகின்றது.

***"5. வேளாண்மை, குடிசை மின் வழங்கலுக்கான விதிவிலக்குகள்***

*சட்டத்தின் 43 ஆம் சட்டப்பிரிவின் விதிவகுப்பு, வேளாண்மை மற்றும் குடிசை மின்னிணைப்புகளுக்குப் பொருந்தாது. இம் மின்னிணைப்புகள் சட்டத்தின் 86(4) ஆம் சட்டப்பிரிவில் விதிக்கப்பட்டபடி, தேசிய மின்சாரக் கொள்கையில் வகுக்கப்படும் வழிகாட்டுதலின்படியும் சட்டத்தின் 108 ஆம் பிரிவின்படி பொதுமக்கள் நலங்கருதி மாநில அரசு வகுக்கும் நெறிமுறைகளின்படியும் அவ்வப்போது ஆணையம் வெளியிடும் நெறிமுறைகளின் ஆளுகைக்கு உட்படும்."*

மேற்கூறிய விதியின் படி மின்சார சட்டம் 43 ஆம் சட்டப்பிரிவின் விதிவகுப்பு, வேளாண்மை மற்றும் குடிசை மின்னிணைப்புகளுக்குப் பொருந்தாது என அறிய முடிகிறது.

7.9 மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கும் பொருட்டு தற்போது அனைத்து மின்பாதை மற்றும் மின்மாற்றி அமைக்கும் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்க தயார் நிலையில் உள்ளது என எதிர்மனுதாரர் தனது வாதுரையில் தெரிவித்துள்ளார். மேலும், தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 50 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின் 22-23 குறியீடு (Target) நிறைவு பெற்றதாக அறியப்பட்டுள்ள நேர்வில் மேல்முறையீட்டாளருக்கு இத்திட்டத்தில் மின்னிணைப்பு வழங்க வழிவகையில்லை என தெரிகிறது. மேலும், தற்சமயம் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு 2024-25-இன் பதிவு குறியீட்டில் முதலில் இருப்பதாக அறியப்பட்டுள்ளதால் அக்குறியீட்டின் அடிப்படையில் அடுத்து வரும் அரசின் இலக்கீட்டில் மின் இணைப்பு வழங்குமாறு உத்தரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் தற்சமயம் normal category-இல் Major பிரிவில் முதல் நபராக இருப்பதால் அரசின் உரிய இலக்கீடு பெற்றவுடன் மேல்முறையீட்டாளருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 13/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு L.K. திருமூர்த்தி, - By RPAD
த/பெ. காளியண்ணன்,
2/47, இலக்கபுரம், அக்ரஹாரம் (அ),
குருசாமிபாளையம், நாமக்கல் மாவட்டம் – 637 403.

2. செயற்பொறியாளர்/இ&ப/ நாமக்கல்,
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
38/A, கோ-ஆப்ரேட்டிவ் காலனி, நாமக்கல் – 637 001.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
நாமக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஜெய் சூர்யா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் எதிரில்,
திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் – 637 001.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.